**மெதிரிகிரிய பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெதிரிகிரிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான மெதிரிகிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,

- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யுதகனாவ மயானத்தில் உள்ள காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் பதியப்படவில்லை. | மதிப்பிடப்பட்டு 2024ஆம் ஆண்டின் கணக்கினுள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை கைமாற்றி கணக்கில் பதிதல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா137,000 ஆன விளம்பரப் பலகை வருமானத்தை மீளாய்வாண்டின் வருமானமாக பதிவுசெய்தமையினால் ஆண்டின் மிகை குறித்த பெறுமானத்தினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டுக்கு ஏற்புடைய வருமானம் அதே ஆண்டில் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் பெறப்பட்ட ரூபா 220,000 பெறுமதியான அரிசி மாவாக்கும் 02 இயந்திரங்கள் 2015 ஆம் ஆண்டில் திருடப்பட்டதெனினும், குறித்த பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உரிய பெறுமதி நிலையான சொத்துக்களில் இருந்து நீக்கப்பட்டு சேத நட்ட பதிவேட்டில் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் மாதம் வரை, களியாட்ட வரி பொருட்டான வருமானம் ரூபா 401,500, நானாவித வைப்புக்களின் கீழ் பதிவுசெய்தமையினால் ஆண்டின் களியாட்ட வரி வருமானம் குறித்த பெறுமானத்தினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 401,500 ஆன களியாட்ட வரி வருமானம் பரிசீலனை செய்யப்பட்டு வருமானமாக எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

-

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| கைத்தொழில் கடன்கொடுநர் | 8,645,396 | I. மீதிகளை உறுதிப்படுத்தல் | கைத்தொழில் கடன்படுநர் மற்றும் கடன்கொடுநர் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | தேவையான சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| கைத்தொழில் கடன்படுநர் | 7,911,690 | II. கடன்படுநர், கடன்கொடுநர் இணக்குதல் | | |

**1.7**

**1.8 இணக்கமின்மைகள்**

**1.8.1 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் | 2019 திசெம்பர் முதல் 2023 திசெம்பர் மாதம் வரையான காலத்தினுள் சபையின் அமய ஊழியர்களின் மாதச் சம்பளத்தின் அடிப்படையில் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 216,877 பெறுமதியான சபையின் உதவுதொகை செலுத்தி இருக்கவில்லை. | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | XXIV அத்தியாயத்தின் பந்தி 3.6 | மீளாய்வாண்டில் 07 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,126,768 பெறுமதியான சம்பளக் கடன் முற்பணங்கள் பொருட்டு கடனை மீள அறவிடும்போது மாதாந்த தவணைப்பணம் அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதமாக தீர்மானிக்கப் பட்டிருக்கவில்லை. | 2024 சனவரி மாதம் முதல் சரிசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | துவணைப்பணத்தை அறவிடுவதற்கான அறிவுறுத்தல்களின்படி செயலாற்றுதல் வேண்டும். |
| (இ) | 2019நவம்பர் 19 திகதிய 2019/14 ஆம் இலக்க வடமத்திய மாகாணத்தின் திறசேரி சுற்றறிக்கை | | | |
| | பந்தி 04 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உரிய பண்ட கணிப்பாய்வு வேலைகள் முடிவடைந்து அதன் பிரதியொன்று 2024 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டியபோதிலும் அவாறு செயலாற்றி இருக்கவில்லை. | கணிப்பாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | உரியவாறு அளவீடுகளை நடாத்தி அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவுகளை மிஞ்சிய வருமானம் ரூபா32,211,799 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவுகளை மிஞ்சிய வருமானம் ரூபா 11,579,674 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,993,116 | 4,382,673 | 4,457,112 | 5,997,764 | 3,384,810 | 5,117,490 | 4,009,761 | 6,072,203 |
| (ii) | வாடகை | 15,858,300. | 7,618,446 | 10,882,609 | 823,259 | 12,382,800 | 7,231,911 | 6,446,113 | 4,087,422 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 309,800 | 531,960 | 531,960 | | 357,250 | 203,784 | 211,784 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 3,127,200 | 4,835,294 | 4,785,398 | 574,769 | 3,205,000 | 1,742,159 | 1,742,159 | 524,873 |
| | | ------------- | ------------- | ------------- | ------------- | -------------- | ------------- | ------------- | ------------- |
| | | 24,288,416 | 17,368,373 | 20,657,079 | 7,395,792 | 19,329,860 | 14,295,344 | 12,409,817 | 10,684,498 |
| | | ======== | ======= | ======= | ======= | ======== | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | நீண்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரும் வீதவரி வருமான நிலுவை மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,997,764 ஆக இருந்தபோதிலும், நிலுவை வருமானத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அதிக தொகை நிலுவை வீதவரியுள்ளவர்களை இனங்கண்டு சிவப்பு அறிவித்தல் வழங்கி அப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | இறைச்சிக்கடை, மீன் பலகைகள், வாகன நிறுத்துமிடங்கள், வார சந்தை போன்றவற்றுக்குரிய பல வருடங்களாக | பதிவழிப்பதற்கு அனுப்பப்பட்ட போதிலும், இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும், நிலுவை வருமானம் தொடர்பாக தற்போது உதவி ஆணையாளர் | நிலுவை வருமானத்தை விரைவாக தீர்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாகவுள்ள ரூபா 371,455 மீதி மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படவில்லை. | அலுவலகம் ஊடாக விசாரணை நடத்தப்படுகிறது எனவும், அதன்படி, நிலுவை வருமானம் தொடர்பாக எடுக்ககூடிய வழிவகைகள் உடனடியாக எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| **(இ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| (i) | மீளாய்வாண்டுக்கு முன்பே இருந்துவரும் நிலுவை வியாபார வரி ரூபா2,129,560ஐ தீர்ப்பதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இதுவரையில் அறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பாக தற்போது உதவி ஆணையாளர் அலுவலகம் ஊடாக விசாரணை நடத்தப்படுகிறது எனவும், அதன்படி, நிலுவை வருமானம் தொடர்பாக எடுக்ககூடிய வழிவகைகள் உடனடியாக எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக தீர்த்தல் வேண்டும். |
| (ii) | 05 வருடங்களுக்கும் மேலாக நிலுவை நீர் கட்டண வருமானம் ரூபா 556,608 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இதுவரையில் அறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பாக தற்போது உதவி ஆணையாளர் அலுவலகம் ஊடாக விசாரணை நடத்தப்படுகிறது எனவும், அதன்படி, நிலுவை வருமானம் தொடர்பாக எடுக்ககூடிய வழிவகைகள் உடனடியாக எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக தீர்த்தல் வேண்டும். |
| (iii) | சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி, மாகாண சபையின் செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் **31**ஆம் திகதியன்று வருமதி நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 47,526,040 மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,981,330 ஆக இருந்தன | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானத்தை விரைவாக தீர்த்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
| --- | --- | --- |
| **துணைவிதி** | | |
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் துணைவிதி விதிக்க வேண்டிய குடிநீர் விற்பனை மற்றும் வாகன இயந்திரங்களுக்கு வாடகை அறவிடல் ஆகிய 2 பிரதான விடயங்களை நிறைவேற்றும் பொருட்டு துணைவிதிகள் விதிக்கப்படவில்லை. | துணைவிதிகளை விதிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | தேவையான துணைவிதிகளை விதித்தல் வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, முறையான சாத்தியக்கூறு ஆய்வின்றி பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கிராமிய இலத்திரனியல் நூலக செயற்றிட்டத்தின் கீழ் 03 இலத்திரனியல் நூலக கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 11,303,033 செலவிடப்பட்டிருந்த போதிலும், தற்போதுள்ள ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகள் காரணமாக, அந்த கட்டடங்களில் தொடர்புடைய திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை சபை வழங்கத் தவறியதால், உரிய செலவினம் பயனற்றதாக இருந்தது. | அம்பகஸ்வெவ கிராமிய இலத்திரனியல் நூலகம் 2023 செப்டம்பர் முதல் பொது நூலக சிறுவர் பிரிவை நடத்துவது எனவும், முகாமைத்துவக் குழு தீர்மானத்தின் அடிப்படையில், ஒரு நூலகத்தில் வணிகச் செயலை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக விண்ணப்பித்த ஒரு தரப்பினருக்கு வழங்குவதற்காக உள்ளக மதிப்பீட்டுக் குழுவொன்றின்மூலம் மதிப்பிட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டு வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. , | நிர்மாணிக்கப்பட்ட சொத்து பயன்பாட்டுக்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் LDSP செயற்றிட்டத்தின் கீழ் ஒரு பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றை நிர்மாணிக்கையில், அதிகார பிரதேசத்தின் தேவைப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அளவில் கட்டடமொன்றை நிர்மாணித்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 35,599,552 செலவிடப்பட்ட போதிலும், ஆனால் நிதியேற்பாடு போதுமானதாக இல்லாமையினால் 2024 மார்ச் மாதமளவிலும் பணிகளை முடிக்க முடியவில்லை. இந்தக் கட்டடத்தில் பகல்நேர பராமரிப்பு நிலையத்தை நடத்துவதற்கு ரூபா 12,410,711 செலவுசெய்து மீளாய்வாண்டில் உபகரணங்களை கொள்வனவு செய்தபோதிலும் அவை 10 மாத காலமாக செயலற்ற நிலையில் இருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு அளவின்படி, இங்கு நிர்மாண பணிகளை முடிப்பதற்கு முடியாமற்போனது எனவும், 2024 செப்டம்பர் முடிவடைந்ததும் சகல வேலைகளையும் முடித்து பகல்நேர பராமரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்றிட்டத்தை உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 53-5060 இலக்கம் கொண்ட கெப் வண்டி 21 ஆண்டுகளுக்கு மேல் சபை வளாகத்தில் செயலற்றநிலையில் உள்ளது. | வடமத்திய மாகாணத்துக்கு வழங்கப்பட்ட மேற்படி இலக்கம் கொண்ட வண்டி நிதி அமைச்சின் ஒருப்பாட்டுடன் வடமத்திய மாகாண பிரதம செயலாளருக்கு கைமாற்றுதல் வேண்டும் எனவும், அதற்காக எம.ரீ.ஏ. 6/8 படிவத்தை நிரப்பி அனுப்பப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கையுதிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை வளாகத்தில் 11 ஆண்டுகளுக்கு மேல் 02 நீர் பவுசர்கள் செயலற்று துருப்பிடிக்கின்றன. | ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | கையுதிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 மே மாதம் முதல் எஞ்சின் பழுதுபார்க்க வேண்டிய நிலையிலுள்ள மோட்டார் கிரேடர் பொறியின் பழுதுபார்த்தலுக்காக ரூபா 4,674,654 மதிப்பீட்டு கிரயத்தை உறப்படுத்துவதற்கு 2023 யூன் 30 ஆம் திகதியன்று வட மத்திய பிரதம செயலாளரின் அங்கீகாரம் கிடைத்து ஒரு வருடம் கடந்த போதிலும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படவில்லை. | பொறிமுறை பொறியியலாளர் பரிந்துரையின்படி எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்து சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட 57 பதவியினர்களில், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில், உண்மையான நிரந்தர ஊழியர்கள் 42 பேர் மட்டுமே இருந்தமையினால், அங்கீகரிக்கப்பட்ட பதவியினர்களின் 09 பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வட மத்திய உள்ளூராட்சி திணைக்களத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவிகளை நிரப்பி உரிய சேவையை வழங்குதல் வேண்டும். |